# பாடசாலை அதிகாரிகள் பணம் வசூலித்து பெற்றோரை கொல்லாமல் கொல்கின்றனர்

## பாரிய போராட்டம் நடத்தப்படும் ஜோசப் ஸ்டாலின் எச்சரிக்கை!



பல பாடசாலைகளில் வகுப்பறைகளுக்கு வர்ணம் பூசுவதற்கும் ஏனைய செலவுகளுக்கும் என 2000, 2500 ரூபா பணம் அநியாயமாக அறவிடப்படுவதாக பெற்றோரிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

இது தொடர்பில் கல்வி அமைச்சிடம் முறைப்பாடு செய்த போதிலும் கல்வி அதிகாரிகள் அது தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், அநீதி இழைக்கப்பட்ட அனைத்து பெற்றோர்களையும் கொழும்புக்கு வரவழைத்து பாரிய போராட்டமொன்றை எதிர்காலத்தில் நடத்தவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2➤

மாலைக்கதிர்
Maalaikkathir




சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 சித்திரை 05 வியாழக்கிழமை 18.04.2024 கதிர் 233

## 'ஈபிஎஃப்' மற்றும் 'ஈடிஎஃப்' அமைச்சரவைப் பத்திரம் அடுத்தவாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும்!

### அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவிப்பு



ஊழியர்களின் செலுத்தப்படாத ஊழியர் சேமலாப நிதியம் (ஈபிஎஃப்) மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் (ஈடிஎஃப்) ஆகிய கொடுப்பனவுகள் தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என பெருந்தோட்ட நிறுவன மறுசீரமைப்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இதன்படி ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் மேலதிக கட்டணங்களுடன் 500 கோடி ரூபாவிற்கும் அதிகமான தொகை வழங்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புத்தாண்டின் தனது முதல் கடமையாக, இதற்குரிய ஆலோசனைகளை அமைச்சின் செயலாளருக்கு வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்ததாக தெரிவித்த அமைச்சர், உழைக்கும் மக்களின் சட்ட உரிமைகளை பாதுகாப்பதன் மூலமே பெருந்தோட்ட நிறுவன சீர்திருத்தங்களை

2➤

## அனைத்துப் பாடசாலைகளுக்கும் இந்த வாரத்திற்குள் சாதாரண தர அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படும்!

### பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவிப்பு



அனைத்துபாடசாலைகளுக்கும் இந்த வாரத்திற்குள் சாதாரண தர அனுமதி பத்திரங்கள் வழங்கப்படும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அனைத்துஅரசாங்கபாடசாலை விண்ணப்பதாரர்களுக்கும்நேற்று (17) தபாலில் நுழைவுச் சீட்டுகள் அனுப்பப்பட்டதாகத் தெரிவித்த பரீட்சை ஆணையாளர், தனியார் பரீட்சார்த்திகளுக்கான அனுமதி பத்திரங்கள் இம்மாதம் 20ஆம் திகதி தபாலில் விநியோகிக்கப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அனுமதிப் பத்திரங்கள் தொடர்பான திருத்தங்களை மேற்கொள்வதற்கான வழிவகைகள் ஒன்லைன் மூலம்

2➤

## கடலில் குழந்தை பிரசவித்த பெண்

யாழ்ப்பாணம், நயினாதீவைச் சேர்ந்த பெண்ணொருவர் கடலில் குழந்தை பிரசவித்துள்ளார்.

நயினாதீவைச் சேர்ந்த பெண்ணுக்கு நேற்று திடீரென பிரசவ வலி ஏற்பட்டதையடுத்து நயினாதீவு பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

அங்கிருந்து அவரை மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றுமாறு வைத்தியர் பரிந்துரைத்தார். அதையடுத்து மேற்படி பெண்ணை யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதற்கு, அம்புலன்ஸ் படகு தற்போது சேவையில் ஈடுபடாததால், பொதுமக்கள் போக்குவரத்து படகில் அவரை ஏற்றி குறிகாட்டுவான் நோக்கி அழைத்து வந்தனர்.

அந்நிலையில், கடலில் படகு பயணித்துக்கொண்டிருந்தவேளை, பிரசவ வலி பெண்ணுக்கு அதிகரித்ததையடுத்து படகின் கீழ் தளத்தில் இருந்த ஆண்களை மேல் தளத்துக்கு அனுப்பி வைத்த பின்னர், படகில் பயணித்த பெண்களே பிரசவம் பார்த்தனர்.

படகு குறிகட்டுவான் இறங்குதுறையை வந்தடைந்ததும், அங்கு தயார் நிலையில் நின்ற புங்குடுதீவு வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனத்தில் தாயையும் சேயையும், யாழ். போதனா வைத்தியசாலைக்கு அழைத்துச்சென்றனர்.

தற்போது தாயும் சேயும் நலமாக உள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (அ)



## மைத்திரிக்கு எதிரான தடை மே 9 வரை நீடிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன செயற்படுவதைத் தடுக்கும் வகையில் பிறப்பிக்கப்பட்ட தடை உத்தரவு எதிர்வரும்

2➤

## மனோவின் பார்வையில் இந்தியத் தேர்தல் எப்படி?



உலகின் மிகப்பெரிய ஜனநாயகத் திருவிழாவின் முதலாம் கட்டம் நாளை ஆரம்பமாகின்றது. தனது பல கட்சி அரசியல் ஜனநாயகம் காரணமாக, இந்தியா, உலக பரப்பில் மிக உயரத்தில் வைத்து மதிக்கப்படுகின்றது எனத் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தனது எக்ஸ்

2➤

## நெடுங்கேணியில் மாரடைப்பால் கணவர் மரணம் இறப்பைத் தாங்க முடியாது மனைவி தற்கொலை!

நெடுங்கேணியில் மாரடைப்பு நோய் காரணமாக கணவன் இறந்ததும், கணவனின் இறப்பை தாங்க முடியாத மனைவி தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளார்.

இன்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா வடக்கு, நெடுங்கேணி, 6ஆம் கட்டை பகுதியில் வசிக்கும் குடும்பஸ்தர் ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதையடுத்து அவர் அவசரமாக நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கிருந்து மேற்படி நபரை வவுனியா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லத் தயாராகியபோது அவரின் மனைவி வவுனியா வைத்தியசாலை செல்வதற்கான பொருட்களை எடுத்து வர வீட்டுக்குச் சென்றார்.

இதன்போது, நெடுங்கேணி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்த கணவர் மாரடைப்பு காரணமாக வைத்தியசாலையிலேயே மரணமடைந்தார்.

அந்தத் தகவல் வீட்டுக்குச் சென்றிருந்த அவரது மனைவிக்குத் தெரியவந்ததையடுத்து, கணவரின் இறப்பைத் தாங்க முடியாது மனைவி தவறான முடிவெடுத்து வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இந்தச் சம்பவத்தில் 18 மற்றும் 15 வயதுடைய இரு பெண் பிள்ளைகளின் தந்தையான 49 வயதுடைய இராமச்சந்திரன் ரவீந்திரன் மற்றும் தாயாரான 49 வயதுடைய இராமச்சந்திரன் ஜோதீஸ்வரி ஆகிய இருவருமே மரணமடைந்தவர்களாவர்.

சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றார்கள். (அ)

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

## மைத்திரிக்கு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மே மாதம் 9ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்ட நீதிமன்றால் இன்று இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவினால் தாக்கல் செய்யப்பட்ட முறைப்பாடு இன்று மீண்டும் அழைக்கப்பட்டபோதே மைத்திரிபால சிறிசேனவுக்கான தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

(அ)

## அனைத்து.........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மட்டுமே அவர்களுக்கு வழங்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இம்மாதம் 22ஆம் திகதி ஒன்லைன் முறைமை திறக்கப்படும் எனவும், திருத்தங்களை சமர்ப்பிக்க 29ஆம் திகதி வரை அவகாசம் வழங்கப்படும் எனவும் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட ஒவ்வொரு விண்ணப்பதாரியும் அதன் பிரதியொன்றை பெற்றுக் கொள்ளலாம் எனவும், பாடசாலை விண்ணப்பதாரிகள் அவ்வாறு திருத்தம் செய்யப்பட்ட விண்ணப்பத்தை பாடசாலை அதிபரின் கையொப்பத்தை பெற்று பரீட்சை பரீட்சை நிலையத்திற்கு அதனை கொண்டு செல்ல வேண்டும் எனவும் பரீட்சை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

தனியார் விண்ணப்பதாரர்கள் ஒன்லைன் முறையில் திருத்தம் செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதாகவும், பெறப்பட்ட நகலை பிரதியெடுத்து அதனை அனுமதி அட்டையுடன் பரீட்சை நிலையங்களில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் பரீட்சைகள் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ரெசி-77)

## 'ஈபிஎஃப்' ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆரம்பிக்க முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக ஊழியர்கள் தரப்பில் 2000 க்கும் அதிகமான வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், இதன் காரணமாக சட்டத்தரணிகளுக்கான கட்டணமாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் பெருமளவு பணத்தை செலவிடுவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெசி-74)

## பாடசாலை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது குறித்து மேலும் தெரிவித்த அவர், "இந்த அரசாங்கம் பெற்றோரிடமிருந்து இயன்றவரைவுக்கும் பணத்தை வசூலிப்பதற்கு பாடசாலை நிர்வாகிகளுக்கு வழிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது, கல்விக்கு நிதி ஒதுக்கீடு செய்வதுமில்லை, பாடசாலை பராமரிப்புக்காக பணம் வசூலிக்கப்படுகிறது. பாடசாலை அதிகாரிகள் முடிந்தவரை பல பெற்றோரை கொல்லாமல் கொன்று விடுகின்றனர். இதனால், பெற்றோர்கள் செய்வதறியாது தவிக்கின்றனர். இது குறித்து எங்களிடம் பெற்றோர் புகார் தெரிவித்து வருகின்றனர்" என்றார். (ரெசி-75)

## மனோவின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தளத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸ ாநாயக்க ஆகியோருக்கும் குறியிடப்பட்டுள்ள தனது எக்ஸ் தள பதிவில் மனோ கணேசன் எம்.பி. மேலும் கூறியுள்ளதாவது -

"543 தொகுதிகள், 28 மாநிலங்கள், 8 ஒன்றிய பிரதேசங்கள் ஆகியனவற்றை ஊடுருவி சுமார் 97 கோடி வாக்காளர்கள் வாக்களிக்கும், 2 ஆயிரத்து 600 கட்சிகளின் வேட்பாளர்களை கொண்ட உலகின் மிக பிரமாண்ட ஜனநாயகத் தேர்தல் நடவடிக்கையின் மூலம், ஆறு வாரங்களில் ஏழு கட்டங்களில், இந்தியாவின் பல கட்சி ஜனநாயகம் இந்திய ஒன்றியம் என்ற இந்திய அரசாங்கத்தைத் தெரிவு செய்கின்றது.

இலங்கைப் பிரஜை என்ற பெருமையுடனும், மறைக்கப்பட முடியாத இந்திய வம்சாவளி பின்னணியுடனும், இந்திய நாட்டு தேர்தல்களைக் கணிக்கின்ற இலங்கையின் ஒரு ஜனநாயகக் கட்சித் தலைவர் என்ற முறையில் இந்தியத் தேர்தல் பிரசாரத்தில் என் மனதை வெகுவாக கவர்ந்த சுலோகம் ஒன்று உண்டு.

அது, "நீங்கள் யாருக்கு வாக்களிக்கப் போகின்றீர்கள் என்பதற்கு நேரம் எடுத்துச் சிந்தியுங்கள்! சரியாக சிந்தித்து உங்கள் சரியான எம்.பியைத் தெரிவு செய்யுங்கள். ஆனால், தேர்தலில் வாக்களிக்க வேண்டுமா? இல்லையா? என ஒருகணமும் சிந்திக்காதீர்கள்! எப்போதும் வாக்களியுங்கள்! அது உங்கள் உரிமை!". இது இலங்கைக்கும் மிகவும் பொருத்தமான செய்தியைத் தரும் சுலோகம் என எண்ணுகின்றேன்.

மிகச் சிறந்த இந்திய மனங்களால் கட்டியெழுப்பப்பட்டு, நியாயம், சமத்துவம், சுதந்திரம் ஆகியவற்றை உறுதி செய்யும் இந்திய ஜனநாயகத்துக்கு எனது பாராட்டுகள்" - என்று மனோ கணேசன் எம்.பி. தெரிவித்துள்ளார்.

(அ)

# பாலித தேவரப்பெருமவின் இறுதிச்சடங்கு நாளை

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாலித தேவரப்பெருமவின் இறுதிக் கிரியைகள், நாளை மதுகம கரம்பேதர பகுதியில் இடம்பெறவுள்ளன.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பாலித தெவரப்பெரும கடந்த 16 ஆம் திகதி பிற்பகல் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

பிரேதபரிசோனையை அடுத்து, அன்னாரின் உடல், அவரது உறவினர்களிடம் நேற்று கையளிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அவரது உடல் அவரது வீட்டில் பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

அவரது உடலுக்கு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்ட அரசியல்வாதிகள் இன்று அஞ்சலி செலுத்தியிருந்தனர். (04)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்புடையோர் தப்ப முடியாது

### தேசிய மக்கள் சக்தியின் உறுதியுரை கையளிப்பு

2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறு தினமன்று இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலில் பலியானவர்களுக்கு நீதியை ஈடேற்றுவதற்கான தேசிய மக்கள் சக்தியின் உறுதியுரை பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகையிடம் இன்று முற்பகல் 11 மணிக்கு பொரளையில் உள்ள பேராயரின் இல்லத்தில் வைத்து தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களால் கையளிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும், அந்தத் தாக்குதலால் நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கும் நீதியைப் பெற்றுக்கொடுப்பதற்காகத் தேசிய மக்கள் சக்தியின் அரசு முறையாக சட்டத்தை அமுல்படுத்தும் எனவும், மேற்படி தாக்குதலுக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புபட்ட நபர்களுக்கு எதிராக முறைப்படி சட்டத்தை அமுலாக்கும் எனவும் வலியுறுத்தும் 7 விடயங்கள் அந்த உறுதியுரையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்தச் சந்திப்பில் தேசிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவம் செய்து பேராசிரியர் கிறிசாந்த அபேசிங்க, சட்டத்தரணி சுனில் வட்டகல, ஜனாதிபதி சட்டத்தரணி உபுல் குமரப்பெரும, சிரேஷ்ட பேச்சாளர் ரொஹான் பெர்னாண்டோ, அருண சாந்த நோனிஸ் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர். (அ)

# கனடா கொள்ளைச்சம்பவம் சந்தேகநபர்கள் அறுவர் கைது!

கனடாவில் இடம்பெற்ற மிகப் பெரிய தங்கக் கொள்ளைச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களில் ஏயார் கனடா விமான சேவையின் இரண்டு பணியாளர்களும் அடங்குவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், ரொராண்டோவில் உள்ள பியர்சன் சர்வதேச விமான நிலையத்தில் வைத்து இந்த கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது கொள்ளையிடப்பட்ட தங்கத்தின் மதிப்பு 16 மில்லியன் அமெரிக்க டொலர்கள் என கனேடிய தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவற்றில் மொத்தம் 400 கிலோ எடை கொண்ட 6,600 தங்கக் கட்டிகள் மற்றும் வெளிநாட்டு நாணயங்களும் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (04)

# கசிப்பு பொதியிடலில் ஈடுபட்ட பெண் கைது

யாழ்ப்பாணத்தில் கசிப்பு விற்பனைக்காக அவற்றை சிறு சிறு பொதிகளாகப் பொதி செய்து கொண்டிருந்த பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பெண்ணொருவர் வீட்டில் கசிப்பு விற்பனையில் ஈடுபட்டுள்ளார் என்று பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் வீட்டைப் பொலிஸார் சுற்றிவளைத்தபோது, வீட்டினுள் விற்பனைக்காகக் கசிப்பைச் சிறு சிறு பொதிகளாகப் பொதி செய்து கொண்டிருந்த பெண்ணைக் கைது செய்துள்ளனர்

சுன்னாகம் பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார். அந்தப் பெண்ணிடமிருந்து சுமார் 10 லீற்றர் கசிப்பைக் கைப்பற்றியுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# ஆட்சி மாறினாலும் வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு உடன்படிக்கைகளை மாற்றாமல் இருப்பதே நியதியாகும்!

## ஐக்கிய மக்கள் சக்தியின் ஹர்ஷ டி சில்வா எம்.பி. விபரிப்பு

எதிர்காலத்தில் அரசாங்கம் மாறினாலும் கடன் வழங்கிய நாடுகளுடனான வெளிநாட்டுக் கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கைகளை மாற்றாமல் தொடர்வது இன்றியமையாதது என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்துத் தெரிவித்தார்.

பெறப்பட்ட கடன்கள் மற்றும் செலவிடப்பட்ட திட்டங்கள் ஆகியவற்றிற்கு என்ன நடந்தது என கணக்காய்வு செய்வதும், சர்வதேச இறையாண்மை பத்திரம் வைத்திருப்பவர்களுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளின் மூலம் கடனை செலுத்துவது தொடர்பில் இலங்கை கொண்டுள்ள கடப்பாடு ஆகியனவும் வெவ்வேறான இரண்டு விடயங்கள் எனவும் அவர் வலியுறுத்தினார்.

எனவே, கணக்காய்வு நடத்தப்படுகின்றது என சர்வதேச நிதிச் சந்தைக்கு அறிவிப்பதன் மூலம் கடன் வழங்கிய நாடுகளுக்கு வழங்க வேண்டிய பில்லியன் கணக்கான டொலர் கடனை வழங்காமல் தவிர்ப்பதென்பது எதிர்காலத்தில் ஆட்சிக்கு வரக்கூடிய



எந்தவொரு அரசாங்கமும் செய்யக்கூடிய காரியமாக இருக்கப் போவதில்லை எனவும் அவர் குறிப்பிட்டார்.

கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் இலங்கைக்கும் கடன் வழங்கும்நாடுகளுக்குமிடையே கைச்சாத்திடப்படுவதாகும், மாறாக இது அரசியல் கட்சிகளுடன் மேற்கொள்ளும் ஒப்பந்தமல்ல. இதனால், இலங்கையின் உள்ளக கணக்காய்வுக்காக வெளிநாடுகள் காத்திருப்பதில்லை என்பதும், உலக நிதிச் சந்தை அவ்வாறு இயங்குவதல்ல என்பது தனக்கும் தனது குழுவினருக்கும் அனுபவத்தில் தெரிந்த ஒன்று எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த கடன் மறுசீரமைத்தல் ஒப்பந்தம் விரைவில் செய்யப்பட வேண்டும் எனவும், எதிர்க்கட்சி அரசியல் கட்சிகளும் கடன் கொடுத்த நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் எனவும் தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர், இதில் எந்தவொரு அரசியலும் இல்லை எனவும் வலியுறுத்தினார்.

இந்த மறுசீரமைப்பு ஒப்பந்தம் விரைவில் மேற்கொள்ளப்பட்டால் நாட்டின் வங்குரோத்து நிலை நீங்கி வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வருவதற்கான வாய்ப்புகள் மேம்படும் எனவும் இதனைச் செய்வதன் மூலம் மீண்டும் பொருளாதார அபிவிருத்தியை அடைய முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

வங்குரோத்து நிலை நீக்கப்பட்டதன் பின்னர் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கைக்கு வந்து மேற்கொள்ளும் நிர்மாணப் பணிகளுக்கான மூலப்பொருட்கள் மற்றும் மூலதனப் பொருட்களின் விலை குறைக்கப்படும் எனவும், இலங்கை மக்கள் இதன் மூலம் பயனடைவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ரெசி-78)

# ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் ஐந்தாம் ஆண்டு நினைவு கூரல்

## ஊர்வலமொன்றிற்கு ஏற்பாடு

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலின் ஐந்தாம் ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், “நீதி கிடைக்கும் வரை விழித்திருப்போம்” என்ற தொனிப்பொருளில் கொழும்பு பேராயர் இல்லம் விசேட சமய நிகழ்ச்சிகளை 21ஆம் திகதி ஏற்பாடு செய்துள்ளது.

மேலும், எதிர்வரும் 20 ஆம் திகதி ஊர்வலமொன்றிற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஊர்வலம் கொழும்பு கொச்சிக்கடையில் தொடங்கி கட்டுவாப்பிட்டி தேவாலயம் வரை நடைபெறும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்பு நடைபெற்ற நேரத்தை நினைவுகூரும் வகையில், 21 ஆம் திகதி காலை அனைத்து கிறிஸ்தவ ஆலயங்களிலும் இறந்தவர்களுக்கான நினைவு கூரல் மணி அடிக்கப்படும் என கொழும்பு பேராயர் இல்லம்



தெரிவித்துள்ளது. அன்றைய தினம் ஆலயங்களுக்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெசி-76)




# புத்தாண்டு காலத்தில் சேவையில் ஈடுபட்ட நீண்ட தூர பேருந்து சேவைகளுக்கு எதிராக 147 முறைப்பாடுகள்



புத்தாண்டு காலத்தில் சேவையில் ஈடுபட்ட நீண்ட தூர பேருந்துகளுக்கு எதிராக 147 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் நயோமி ஜயவர்தன தெரிவித்துள்ளார்.

நிர்ணயிக்கப்பட பயண கட்டணத்திற்கு அதிகமான கட்டணத்தை வசூலித்தமை தொடர்பான புகார்களே இவற்றுள் அதிகம் எனவும், இது தொடர்பாக சுமார் 40 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், பேருந்து பயண நேரம் நேர குறித்து 2542 பயணிகளிடமிருந்து விசாரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

1955 திறன் அழைப்புப் பிரிவுக்கு அளிக்கப்பட்ட புகார்கள் குறித்து விசாரண நடத்தப்படும் எனவும், புத்தாண்டிற்கு ஊர்களுக்கு சென்று வர 1500 சிறப்புப் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டதாகவும், அதனூடே 2200 பேருந்து வழித்தடங்கள் நடைபெற்றதாகவும் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ஊர்களுக்கு செல்லும் பயணிகளின் வசதிக்காக புத்தாண்டு விசேட பஸ் சேவையானது எதிர்வரும் 21ஆம் திகதி வரையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ரெசி-80)

# இரண்டு வயோதிபப் பெண்கள் வீட்டிலிருந்து சடலங்களாக மீட்பு

களுத்துறை தெற்கு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசுரு உயன பகுதியிலுள்ள வீடொன்றில் இருந்து சந்தேகத்துக்கிடமான முறையில் இரண்டு பெண்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.


குறித்த வீடு அமைந்துள்ள பகுதியில் கடும் துர்நாற்றம் வீடுவதாக 119 எனும் துரித இலக்கத்துக்குக்கிடைத்த முறைப்பாட்டுக்கமைய நேற்று மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

65 மற்றும் 79 வயதுடைய பெண்களே சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார், பிரேத பரிசோதனை இன்று நடைபெறும் என்றும் தெரிவித்துள்ளனர். (அ)

# டெங்கு எனும் கொடும் அரக்கன்!

## விழிப்புணர்வும் நடவடிக்கைகளும்





இன்று இலங்கையில் டெங்கு நோய் பரவலாக காணப்படுகிறது. பலர் பாதிக்கப்பட்டு பல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுமுள்ளனர். இந்த நோய்க்கு மூலகாரணம் ஒரு வகை நுளம்பு. இதில் மக்களிடையே நிலவும் எந்தப்பிரிவினையும் - அதாவது தமிழ் நுளம்பு, ஆய்கில நுளம்பு, சிங்கள நுளம்பு என்று இல்லை. எல்லாம் நுளம்பு தான்! இது யாரைக்கடித்தாலும் பிரச்சனை தான்!!

எந்த மதத்தைக் கடித்தாலும், அல்லது எந்த இனத்தைக் கடித்தாலும் பிரச்சினை தான். ஆறறிவு புத்திஜீவி மக்கள் கூட்டம் பார்க்கும் இன, மத, மொழி, சாதிகளைத் தாண்டியே போட்டுத் தாக்கும் - அது தான் நுளம்பு!

டெங்கு நோய் என்பது வைரஸ் மூலம் பரவுகின்ற ஒரு நோய் என்பதுடன் நோய்த்தொற்றுள்ள ஒரு நுளம்பு காவியாகவும் செயற்படுகிறது. கட்டமைப்பு ரீதியாக இது மிகச் சமமான போதும், நோயைப் பரப்புவதில் வித்தியாசமான வைரஸ்கள் செயற்படுகின்றன - (DEN 1, DEN 2 , DEN 3, DEN 4).

டெங்கு தொற்றுவதன் மூலம் ஏற்படும் நோய் நிலைமைகள் மிகப் பெரிய வீச்சினுள் விரிந்து செல்வதுடன் சில நபர்களிடம் எந்தவித நோய் அறிகுறிகளும் தென்படமாட்டாது - சிலரிடம் நோய் அறிகுறிகள் தென்படும்.

நோய் அறிகுறிகளைக் கொண்ட நபர்களுள் பெரும்பாலானவர்களிடம் சாதாரண வைரஸ் காய்ச்சல் நிலைமை, டெங்கு காய்ச்சல் அல்லது அசாதாரண நோய் அறிகுறிகளுடன் கூடிய டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை ஏற்பட முடியும். டெங்கு காய்ச்சல் காரணமாக ஆகக் கூடுதலாக காணக்கிடைப்பது டெங்கு காய்ச்சல் மற்றும் டெங்கு குருதிப்பெருக்கு நிலைமை என்பதுடன் அசாதாரண நோய் அறிகுறியுடன் கூடிய டெங்கு நோய் நிலைமைகள் மிக அபூர்வமாகவே நிகழ்கின்றன - இது ஒரு வீதத்துக்கும் குறைவாகும்.

### டெங்குக் காய்ச்சல்

டெங்குக் காய்ச்சலின் போது ஒரேயடியாக ஏற்படும் கடுமையான காய்ச்சல், கடுமையான தலைவலி மற்றும் பின்புறக் கண்களில் வலி, மூட்டுக்களிலும் தசைகளிலும் வலி என்பன பெரும்பாலும் ஏற்படுவதுடன் சில நோயாளர்களுக்கு சிவப்பு நிறத்திலான பரந்துபட்ட தன்மையில் கொப்புளங்கள் மற்றும் சில வேளைகளில் குருதி கசியும் நிலைமைகள் ( முரசுகளிலிருந்து, மூக்கிலிருந்து சளி மற்றும் தோல் என்பவற்றிலிருந்து) தோன்றக்கூடும்.

### டெங்கு குருதிப்பெருக்கு

டெங்கு குருதிப்பெருக்கு - டெங்குத் தொற்றின் உச்சகட்ட நோய் நிலைமை ஆவதுடன் மிகவும் சிறிய எண்ணிக்கையான நோயாளர்களுக்கே இந்நிலைமை ஏற்படுகிறது.

டெங்கு குருதிப்பெருக்கு நோயின்போது பெரும்பாலும் தெளிவாக வித்தியாசப்படுத்தி இனங்காண முடியுமான 3 கட்டங்கள் காணப்படுகின்றன.

அவை - காய்ச்சலுடன் கூடிய கட்டம் (இக்கட்டத்தின் போது 7 தினங்களுக்கு குறைவாகக் காணப்படும் கடுமையான காய்ச்சலுடனான காலம்), நெருக்கடியான கட்டம் (நெருக்கடியான கட்டம் ஆரம்பமாவது திரவவிழையம் கசிய ஆரம்பித்தல் மற்றும் சதாதாரணமாக காய்ச்சல் தணிந்து செல்லலுடனேயாகும்). இந்நிலைமை 1-2 தினங்கள் வரையான காலத்திற்கு காணப்படுவதுடன் ஏற்கனவே இனங்கண்டு தேவையான அக்கறை செலுத்தப்படாமையால் நோயாளி அதிர்ச்சி நிலைமைக்குக்கூட ஆளாகலாம்.



குணமடையும் கட்டம் - 2-5 தினங்கள் வரையான காலத்திற்கு காணப்படுவதுடன் இக்கால கட்டத்தில் நோயாளியின் உணவு மீதான விருப்பம் அதிகரிக்கும், இதயத் துடிப்பு குறைவடையும்.

குணமடையும் சந்தர்ப்பத்திற்கே உரித்தான கொப்புளங்கள் (சிவப்பு நிற பின்னணியில் வெள்ளை நிற கொப்புளங்கள்) பெரும்பாலும் உடல்பூராகவும் அரிப்புணர்ச்சி காணப்படும். (உள்ளங்கையிலும் அடியிலும் அதிகமாகக் காணப்படும்)



இவ்வேளையில் அதிகமாக சிறுநீர் கழிக்கவேண்டியேற்படும்.

நோயாளியிடம் பின்வரும் நோய் அறிகுறிகள் தென்படுமாயின் (விசேடமாக காய்ச்சல் குறைகின்ற வேளையில்) கட்டாயமாக வைத்தியரின் அறிவுரைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

தொடர்ச்சியாக வாந்தியெடுத்தல், வயிற்று வலி, கடுமையான தாகம், கடுமையான தூக்கமும் மயக்க நிலைமையும், உணவு மீதுள்ள வெறுப்பு, அசாதாரண குருதி வடியும் நிலைமை உதாரணமாக - மாதவிடாய்ச் சுற்றின்போது அதிகமான குருதிப்பெருக்கு இடம்பெறல், குறித்த தினத்திற்கு முன்னர் மாதவிடாய்ச் சுற்று இடம்பெறல்.

நோயாளியிடம் பின்வரும் நோய் அறிகுறிகள் காணப்படுமிடத்து உடனடியாக வைத்திய அறிவுரை பெற்றுக்காள்ளப்படல் வேண்டும்.

கைகால்களில் குருதியற்ற மற்றும் குளிரான தன்மை, அமைதியின்மை மற்றும் குழப்ப நிலைமை, தோலின் நிறம் மாற்றமடைதல், சிறுநீர் வெளியேறாமை அல்லது குறைவாக சிறுநீர் வெளியேறல், நடத்தையில் மாற்றம் - மயக்கம் அல்லது பிறள்வான வார்த்தைப் பிரயோகம்.

### டெங்கு நோய் நிலைமையை முன்னரே இனம் காணல்

டெங்கு நோயினை முன்னரே இனங்கண்டு உரிய சிகிச்சையளிப்பதன் மூலம் டெங்கு நோயின் சிக்கலான மற்றும் குணப்படுத்த முடியாத நிலைமையினைக் குறைத்துக்கொள்ள முடியும்.

இலங்கையில் தற்போது நிலவும் டெங்கு - அதி நிறமூர்த்த நிலைமையின் கீழ் காய்ச்சலுடன் பின்வரும் நோய் அறிகுறிகளுடன் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்கள் டெங்கு நோயினால் (டெங்கு காய்ச்சல் அல்லது டெங்கு குருதிப்பெருக்கு) அவதிப்படுவதாக சந்தேகித்து தேவையான அவதானத்தைச் செலுத்துவது அத்தியவசியமாகும்.

வெண் குருதியணுக்கள் குறைவடைதல் (<5000/ mm3), குருதிச் சிறுதட்டுக்கள் ≤150>000/mm3, குருதியின் செறிவுத் தன்மை அதிகரித்தல் (5 - 10 சதவீதம்), கடுமையான காய்ச்சலுடன் கூடிய ஒரு நோயாளியின் முகம் மற்றும் கைகால்கள் சிவப்பு நிறத்தில் பரவிய தழும்புளுடன் கூடிய தன்மையில் காணப்படல், வெண்குருதியணுக்களின் அளவு குறைவடைதல்.

அதிர்ச்சி நிலைமையில் வருகை தரும் ஒரு நோயாளி விசேடமாக காய்ச்சல் இன்றி, கைகால்கள் குளிராக, இதயத் துடிப்பு வேகமாக நாடித் துடிப்பு மற்றும் குறைவான இரத்த அமுக்கத்துடன் காணப்படின் டெங்கு அதிர்ச்சி நிலைமை என சந்தேகித்தல் வேண்டும்.

NS 1 நோய் எதிர்ப்பு நோய்தொற்றியுள்ள ஒரு நோயாளியிடம் காய்ச்சலின் ஆரம்ப கட்டத்தில் குருதிப் பரிசோதனையின் மூலம் கண்டறிய முடியுமான புதிய இரசாயனப் பரிசோதனையின் மூலம் நோயாளிக்கு டெங்கு தொற்றியுள்ளதாக மாத்திரம் கண்டுபிடிக்க முடியும். ஆயினும் நோயாளிக்கு டெங்கு காய்ச்சல் அல்லது டெங்கு குருதிப்பெருக்கு

(5ஆம் பக்கம் பார்க்க..)

# டெங்கு எனும் கொடும் அரக்கன்!

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...) தொற்றியிருப்பதாக வேறுபடுத்தி இனங்காண்பதற்கு

இப்பரிசோதனை மூலம் அவகாசம் கிடைப்பதில்லை. இதன் காரணமாக டெங்கு நோய் என்பதாக ஆரம்ப கட்டத்தில் சந்தேகத்திற்கிடமான வேளைகளில்மாத்திரம் இப்பரிசோதனையினை மேற்கொள்ளல் பயனளிக்க முடியும்.

### பூரணமான குருதிப்பரிசோதனை மேற்கொள்வதன் முக்கியத்துவம்

காய்ச்சல் ஏற்பட்டு மூன்றாவது தினத்தில் அனைத்து நோயாளர்களுக்கும்பூரணமான குருதிப் பரிசோதனை மேற்கொள்ளுதல் அத்தியவசியமாகும். ஒரு சில விசேட நோயாளர்களுக்கு முதலாவது தினத்தில் அல்லது முதல் தடவையாக சிகிச்சைக்காக வருகை தந்த சந்தர்ப்பத்திலேயே குருதிப் பரிசோதனையொன்று மேற்கொள்ளப்படல் வேண்டும்.



கர்ப்பிணிப் பெண்கள், ஒரு வயதுக்கு குறைந்த பிள்ளைகள், முதியவர்கள் மற்றும் ஏனைய காலங்கடந்த நோயினால் பீடிக்கப்பட்டுள்ள நபர்கள் போன்றோர் கவனத்திற்குரியவர்கள்.

குருதிச் சிறுதட்டுக்களின் அளவு $\geq150>000/$ mm3 எனின் மூன்றாவது தினத்திலிருந்து நாளாந்தம் பூரண குருதிப்பரிசோதனை மேற்கொள்ளல் அத்தியவசியமாகும்.

குருதிச் சிறுதட்டுக்களின் அளவு $\leq150>000/$ mm3 எனின் நாளொன்றுக்கு இரு தடவைகள் பூரண குருதிப் பரிசோதனை மேற்கொள்ளல் அத்தியவசியமாகும்.

நோயாளியின் சிகிச்சை நிலைமை, அபாயமான நோய் அறிகுறிகளைக் காட்டுதல் மற்றும் ஏனைய சமூகக் காரணிகள் என்பவற்றில் - நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிக்கும் தேவைப்பாடு தங்கியுள்ளது.

குருதிச் சிறுதட்டுக்களின் அளவு $\leq100>000/$ mm3 ஆகக் காணப்படும் வேளைகளில் நோயாளியை வைத்தியசாலையில் அனுமதிப்பது அத்தியவசியமாகும்

### டெங்குப் பரவலைத் தடுக்கும் முயற்சிகள்!

1. அரசாங்கம் சொல்லும் அனைத்து சுகாதார வழிகள், வரமுன் காப்பு நடவடிக்கைகளைளில் மனிதர்கள் அனைவரும் பிரிவினை இன்றி ஒற்றுமையாக இணைந்து பின்பற்ற வேண்டும்.

தடுப்பு என்பது நுளம்புக்கடிக்கு எதிரான பாதுகாப்பையும் அடிப்படையாகக் கொண்டது. ஏடிஸ் கொசுக்கள் உட்புற மற்றும் வெளிப்புற சூழல்களில் தினசரி கடிக்கும் செயல்பாடுகளைக் காட்டுகின்றன. எனவே, தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் நாள் முழுவதும் மற்றும் குறிப்பாக அதிக கொசுக்கள் செயல்படும் நேரங்களில் (நள்ளிரவு மற்றும் பிற்பகல்) பயன்படுத்தப்பட வேண்டும்.

டெங்குக் காய்ச்சல் அபாயம் உள்ள பகுதிகளில் தங்கும்போது நுளம்புக்கடியைத் தவிர்க்க தனிப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற கொள்ள வேண்டும்.



நுளம்பு புகாத வலைத் துணிகளைப் பயன்படுத்தி வளாகத்தின் கதவுகள் மற்றும் ஜன்னல்களைத் திரையிடுதல் போன்ற உடல் ரீதியான தடைகளைப் பயன்படுத்துதல். காலை மற்றும் மதியம் வெளியில் வேலை செய்பவர்களுக்கு பிரத்யேகமாக உடலை மறைக்கும் பாதுகாப்பு உடைகள்.

சிட்ரோனெல்லா எண்ணெய், எலுமிச்சை புல் எண்ணெய், வேப்ப எண்ணெய் மற்றும் DEET (N,N-Diethyl-m-toluamide) கொண்ட இரசாயன விரட்டிகள் போன்ற இயற்கை விரட்டிகளின் பயன்பாடு. இருப்பினும், விரட்டிகளின் விளைவுகள் குறுகிய காலமாகும் (அதிகபட்சம் 6 மணித்தியாலங்கள்). அவற்றின் தயாரிப்பு லேபிளில் சுட்டிக்காட்டப்பட்ட அறிவுறுத்தல்களின்படி விரட்டும் பயன்பாடு கண்டிப்பாக செய்யப்பட வேண்டும்.

டெங்கு பரவுதல் முக்கியமாக நகர்ப்புறங்களில் காணப்படுகிறது. பொதுவாக நோயாளிகளின் குடும்பம் அல்லது உடனடி சுற்றுப்புறக் குழுக்கள் (கிளஸ்டர்கள்) பரவலுக்கு ஏதுவாகிறார்கள். எனவே, குடும்பத்தில் உள்ள ஒருவருக்கு அல்லது அருகில் உள்ளவர்கள் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டிருந்தால், அத்தகைய நோயாளிகளும் மற்றவர்களும் கொசுக்கடியிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும்.

நோய்த்தொற்று இல்லாத கொசுக்களுக்கு நோய் பரவுவதைத் தடுப்பதற்காக, அறிகுறி நோயாளிகளுக்கும் இதே போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகள் பொருந்தும். முக்கியமாக கொசுக்கள் உற்பத்தியாவதைக் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு நீர் தேங்கும்பொருட்களான இளநீர்க்கோம்பைகள், டயர்கள், சிரட்டைகள், போத்தல்கள், பொலித்தீன் பைகள் உரிய முறையில் அப்புறப்படுத்தப்படவேண்டும்!

வீட்டுச் சூழலில் நீர் தேங்கி நிற்கும் சிறிய நீர்த்தேக்கம், மரப்பொந்துகளை அகற்றல்.

மேலும் குடும்பத்தில் ஒருவருக்கு நுளம்பு கடித்தால் மற்றவர்களையும் அவரையும் பாதுகாத்து, நுளம்பு வலைகளைப் பயன்படுத்தல். இதன்போது ஒரு வலை மட்டும் இருப்பின் பாதிக்கப்பட்டவரை இவ்வலையைப் பயன்படுத்தி படுக்கவைக்கவேண்டும்.

2. அரசும் முன்னர் போல் நுளம்பு தடுப்பு புகைமருந்துகள் அல்லது வேறு மருந்துகளை கிராம ரீதியில் அனைத்து இடங்களிலும் பயன்படுத்தி அதன் பெருக்கத்தைக் குறைக்க வேண்டும்.

இதற்கும் செலவு ஆகும் தான்! ஆனால், ஒரு பகுதிக்கு தொற்றுவந்தால் அனைவருக்கும் சிகிச்சை அளிக்கும் செலவை விட குறைவாகவே இதற்கான செலவு இருக்கும். அதற்காக நோயாளிக்கு சிகிச்சை அளிக்கவேண்டாம் எனக்கூறவில்லை. வரமுன் காப்பு ஏற்பாடாக முன்கூட்டியே கிராம மட்டத்தில் இருந்து நகரம், மாவட்டம், மாகாணம், நாடு முழுவதும் டெங்குத் தடுப்பு மருந்து அடிப்பது காலத்தின் தேவையாகும்.

இதனால் பல நோயாளர்கள் உருவாகுவதை முன்கூட்டியே தடுத்து அவர்களைக் காப்பாற்றமுடியும்.

இந்த அருமையான அனைத்து தகவல்களையும் தந்த அனைவருக்கும் நன்றிகள். விசேடமாக தேசிய டெங்கு தடுப்புப் பிரிவின் உத்தியோகபூர்வ இணையத்தளம் மற்றும் யாழ் சுகாதாரப் பரிசோதகர் நிஷரூபன் நற்குணராஜா. இது தொகுப்பே அன்றி அறிதியானதும் உறுதியானதும் முடிவானதும் அல்ல. மருத்துவர்கள் அல்லது துறைசார் வல்லுனர்களின் கருத்துக்கள், ஆலோசனைகள், திருத்தங்கள் இருப்பின் தயங்காது கூறுங்கள். அனைவருக்கும் உதவியாக இருக்கும்.

தொகுப்பு - தியாகராஜா சத்தியேந்திரா
தனித்துவமான ஆன்மீகத்தலைவரும்வழிகாட்டியும்
(Independent Spiritual Leader & Guide, Former Biomedical Engineering's Assistant , Ministry of Health, Srilanka.)
ஆஸ்பத்திரி வீதி,
சிதம்பர நடராஜர் கோவில் மடம்
சங்கானை.
தொ.பே.இல : 0094 761425768



# சாதனை படைத்த இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி!



தென்னாபிரிக்க மகளிர் - இலங்கை மகளிர் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடரின் மூன்றாவது போட்டியில் இலங்கை அணி வெற்றி பெற்று 1-1 என்ற கணக்கில் தொடரைச் சமப்படுத்தியுள்ளது.

அதேவேளை, இலங்கை மகளிர் அணியின் தலைவி சாமரி அத்தபத்துவின் 195 ஓட்டங்களின் உதவியுடன், சர்வதேச ஒருநாள் போட்டியில் 302 ஓட்டங்கள் எனும் வெற்றி இலக்கைக் கடந்து இலங்கை மகளிர் அணி சாதனையும் படைத்துள்ளது.

தென்னாபிரிக்காவிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி, இரு அணிகளுக்குமிடையிலான சர்வதேச ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவதும் இறுதியுமான போட்டியில் நேற்று (17) பங்கு பற்றியிருந்தது.

போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இலங்கை அணி களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட தென்னாபிரிக்க அணி 50 ஓவர்களில் 5 விக்கெட் இழப்பிற்கு 301 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பில் அணித் தலைவி லோரா 184 ஓட்டங்களையும், மரிசான் கப் 36 ஓட்டங்களையும், நாடின் 35 ஓட்டங்களையும், லாரா குடால் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். இலங்கை அணியின் கவிஷா 2 விக்கெட்டுகளையும், சாமரி அத்தபத்து ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றிக்கொண்டனர்.

302 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்கு துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இலங்கை அணி 44.3 ஓவர்களில் 4 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கையடைந்தது.

இலங்கை அணி சார்பில் சாமரி அத்தபத்து 139 பந்துகளில் 195 ஓட்டங்களையும், நிலக்ஷிகா 50 ஓட்டங்களையும் மற்றும் விஷ்மி குணரத்ன 26 ஓட்டங்களையும் எடுத்தனர்.

சாமரி அத்தபத்து பெற்றுக்கொண்ட 195 ஓட்டங்கள், மகளிர் சர்வதேச ஒரு நாள் போட்டிகளில் வீராங்கனையொருவர் பெற்றுக் கொண்ட மூன்றாவது அதிகூடிய ஓட்ட எண்ணிக்கையாகும்.

தென்னாபிரிக்க அணியின் அயபோங்கா 2 விக்கெட்டுகளையும், டெல்மி மற்றும் நாடின் இருவரும் தலா ஒரு விக்கெட்டினையும் கைப்பற்றினர்.

போட்டியின் ஆட்ட நாயகியாக இலங்கை அணியின் தலைவி சாமரி அத்தபத்துவும், தொடரின் சிறப்பாட்டக்காரராக தென்னாபிரிக்க அணித் தலைவி லோராவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இரு அணிகளுக்கும் இடையிலான ஒருநாள் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியில் இலங்கை மகளிர் அணி 6 விக்கெட்டுகளினால் வெற்றியீட்டியதன் மூலம், தொடர் 1-1 என சமநிலையில் நிறைவடைந்துள்ளது.

தொடரின் முதலாவது போட்டி மழை காரணமாக கைவிடப்பட்டிருந்தது. இரண்டாவது போட்டியில் தென்னாபிரிக்க மகளிர் அணி வெற்றி பெற்றிருந்தது. (04)



# யால தேசிய பூங்காவைப் பார்வையிட்ட லட்சத்துக்குமதிக சுற்றுலாப் பயணிகள்!

*யால தேசிய பூங்காவைப் பார்வையிட ஒரு இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாக வனவிலங்குப் பாதுகாப்புத் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*இந்த வருடத்தின் கடந்த சில மாதங்களில், இலங்கையிலுள்ள தேசிய பூங்காக்களைப் பார்வையிட வந்த வெளிநாட்ட சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வரலாறு காணாத அளவுக்கு அதிகரித்துள்ளது.*

*ஜனவரி மற்றும் மார்ச் மாதங்களுக்கு இடையில் இரண்டு இலட்சத்துக்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் தேசியப் பூங்காக்களுக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.*

*வஸ்கமுவ, குமண, வில்பத்து, புந்தல, உடவலவ, மின்னேரிய, கவுடுல்ல போன்ற தேசியப் பூங்காக்களுக்கு அதிகளவான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் மூலம் கடந்த மூன்று மாதங்களில் 200 கோடி ஷரூபாவுக்கும் அதிகமான வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளமையும் அறியவந்துள்ளது.*

*கடந்த வருடத்தை விட இந்த வருடம் தேசிய பூங்காக்கள் மூலம் பெறக்கூடிய வருமானம் அதிகரிக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*இதேவேளை, வருடத்தில் இதுவரையான காலப்பகுதி வரையில் 6,86,300க்கும் அதிகமான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர் என்றும் தரவுகள் கூறுகின்றன.*

*(04)*








## கலாசாலையில் தமிழக பேராசிரியரின் உரை

தமிழ்நாடு தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகக் கல்வியியல் புலத் தலைவர் பேராசிரியர் முனைவர் கு . சின்னப்பன் வழங்கும் அதிதி உரை எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கள் கிழமை காலை 9 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதி லட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சுந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் 'ஆசிரியர் கல்வியின் சமகாலச் செல்நெறி' என்ற பொருளில் உரை இடம்பெறும்.

நிகழ்வில் அதிதி அறிமுக உரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கல்வியியல் துறை விரிவுரையாளர் இரத்தினசிங்கம் சர்வேஸ்வரா ஆற்றுவார்.

தமிழக பேராசிரியரின் பெறுமதி மிக்க இவ்வுரை நிகழ்வில் விரும்பிய எவரும் கலந்து பயன்கொள்ளலாம் என கலாசாலை அதிபர் அறிவித்துள்ளார்.



## யாழ் மாவட்ட அபிவிருத்தி அனுமதிக் கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் மற்றும் முன்னெடுக்கப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களை வினைத்திறனாக முன்னெடுக்கும் வகையில் அனுமதி வழங்குவதற்கான கலந்துரையாடல் மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இணைத்தலைவரும் வடக்கு மாகாண ஆளுநருமான சாள்ஸின் பிரசன்னத்துடன் இன்று யாழ் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கூட்டத்தில் வீட்டுத்திட்டம், காணி விடுவிப்பு, குடி நீர் வழங்கல், வீதி அமைப்பு மற்றும் புனரமைப்பு, விவசாய நலன்கள், சட்டவிரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்தல், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

குறித்த கூட்டத்தில் யாழ். மாவட்ட பதில் அரசாங்க அதிபர் பிரதீபன் , மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீமோகன், மற்றும் பிரதேச செயலர்கள், பிரதேச சபைகளின் செயலாளர்கள், துறைசார் அரச நிறுவனங்களிம் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு தங்களின் கருத்துக்களை தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (O1)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.04.2024இல் வெளியிடப்பெற்றது.